## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| M.C.O.P. No. 46/2020 | Date :08.07.2022. | PW1 |
| Name: ராஜ்குமார் | S/o. கந்தசாமி | |
| Evidence Recorded Time: 04.46 P.M. to 05.00 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்தில் இறந்துபோனது என் தகப்பனார். விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை. இறந்துபோனவருக்கு மூன்று மகன்கள் வாரிசுகள் ஆவார்கள். நான் டாஸ்மார்க் கடையில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருகிறேன். 3-ம் மனுதாரர் கணேசன் பெயிண்டிங் வேலை செய்துவருகிறார். 4-ம் மனுதாரர் சுரேஷ் நடன இயக்குனராக பணியாற்றி வருகிறார். அனைவருக்கும் திருமணம் நடைபெற்று குழந்தைகள் இருக்கிறது என்றால் சரிதான். என் அப்பாவின் வருமானத்தை நம்பி நாங்கள் இருந்ததாக சொல்வது எங்களுக்கு தனிப்பட்ட வருமானம் இருப்பதாகவும் அப்பாவின் வருமானத்தை மட்டும் நம்பி இருந்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் அனைவரும் கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்தோம். தற்போது அனைவரும் தனித்தனியாகத்தான் இருக்கிறோம். நான் 17 ஆண்டுகளாக டாஸ்மார்க் கடையில் வேலை செய்து வருகிறேன். தற்போது நான் ரூ.9000/- சம்பளம் பெறுகிறேன். என் அப்பா ஆக்ஸிஸ் வங்கி ATM மையத்தில் காப்பளராக பணி புரிந்தார். நாங்கள் தாக்கல் செய்த மனுவிலும், பிரமான பத்திரத்திலும் அவர் பணி சமயத்தில்தான் விபத்தில் இறந்ததாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். பணியில் இருக்கம்போது இறந்ததால் ஆக்ஸிஸ் வங்கி மீது ஏதேனும் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. ஒரு நிறுவனத்தில் பணிபுரியும்போது அந் நிறுவன ஊழியர்களை காக்கவேண்டியது அந் நிறுவனத்தின் கடமை என்றால் சரிதான். என் அப்பா பணியின் போது இறந்ததால் மேற்சொன்ன வங்கி இழப்பீடு வழங்க கடமைப்பட்டுது என்றால் சரியல்ல. மேற்சொன்ன நிறுவனத்தில் இழப்பீடு கோரி எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன நிறுவனம்தான் என் தகப்பனார் பணியில் இருக்கம்போது இறந்தால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் அவ்வாறு இல்லை. எதிர்மனுதாரர்தான் விபத்து ஏற்படுத்தினார், அதனால் அவர்தான் பொறுப்பு. விபத்து சமயத்தில் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் வேகமாகவும், ஆஜாக்கரதையாகவும் வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ரோட்டின் இடது புறமாக மெதுவாக வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. போலீசார் வரைந்த வரைபடத்தை வரைந்ததை நான் பார்க்கவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தேன். போலீசார் தாக்கல் செய்த வரைபடத்தில் விபத்து ரோட்டின் இடது புறமாகத்தான் நடந்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ரோட்டின் இடது புறமாக மெதுவாக தான் வந்தார் என்றும் என் அப்பாதான் திடீரென்று குறுக்கே வந்ததால்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. என் அப்பா ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்தார். இந்த வழக்கில் மேற்சொன்ன விபத்து வழக்கில் குற்றவியல் வழக்கில் நடந்த ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வாகனத்தின்று காப்பீடு இல்லை என்றால் சரிதான். பிரமாண பத்திரத்தில் எதிர்மனுதாரர்தான் விபத்திற்கு காரணம் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நாங்கள் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.